நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2019

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

தரம் : உயர்நிலைப் பிரவு (ஆண்டு 11, 12)

**Level : Advanced (Year 11 & 12)**

வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்

Time Given : 90 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.

(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**June 2019**

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழேயுள்ள 1 - 4 வரையிலான கேள்விகளுக்கு முழு வசனங்களில் பதில் எழுதுக:**

குருஷேத்திர யுத்தம் முடிந்து பாண்டவர்கள் அரசு அமைத்துவிட்டார்கள். தருமன் (யுதிஷ்டிரன்) அரசனாகி விட்டான். தனது ஆட்சிக்குக் கீழ் உள்ள ஒவ்வொரு பகுதியையும் தம்பிகள் ஒவ்வொருவருக்கும் என பகிர்ந்து கொடுத்து தனி அரசாட்சி செய்யும்படியாக நியமிக்கிறான். அவர்களும் ஆளுக்கு ஒரு அரண்மனை, சேவகர்கள், கேளிக்கைகள் என்று சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

ஒருநாள் கிருஷ்ணர், பீமனின் அரண்மனைக்கு வந்து சேர்கிறார். பீமன் அவரை வரவேற்று உபசரிக்கிறான். கிருஷ்ணர் மனம் மகிழ்ந்து, 'பீமா! நீ சந்தோஷமாக இருப்பது சரி, ஆனால் இந்த மாதிரி நேரங்களில், உன் அம்மா உன்னோடு இல்லாததுதான் ஒரே குறை' என்கிறார். அம்மா எப்போதும் தருமனோடுதான் இருக்கிறார் என்கிற பீமனின் ஆதங்கத்தை இந்த எண்ணம் மெள்ளக் கிளறிவிடுகிறது. அவன் அம்மாவை தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து, தருமனின் அரண்மனைக்குப் போகிறான்.

இதற்குள் கிருஷ்ணர் தனது அபிமானத்துக்குரிய அருச்சுனனையும் (அர்ஜுனனையும்) அழைத்து இதே யோசனையைச் சொல்கிறார். அவனும், தன் அம்மா தன்னோடு இருப்பதுதான் சரி என்று அழைத்து வரச் செல்கிறான். நகுல, சகாதேவர்களிடம், 'உங்களோடு குந்திதேவியார் இருப்பதுதான் சரி' என்று சொல்லி, அவர்களையும் தருமனிடம் அனுப்பி வைத்துவிட்டு கிருஷ்ணர் புறப்பட்டுப் போகிறார்.

பாண்டவர்கள் ஒவ்வொருவரும் தன்னோடுதான் அம்மா இருக்கவேண்டும் என்று முறையிடுகிறார்கள். நகுல, சகாதேவர்களுடன் அம்மா போவதுதான் சரியானது என்று தருமன் முடிவு செய்து, அவர்களுடன் தாயை அனுப்பி வைக்கிறான். பீமனும், அரச்சுனனும் ஏமாற்றத்துடன் அரண்மனை திரும்புகிறார்கள்.

கிருஷ்ணர் அன்றிரவே பீமனைத் தேடிவந்து, 'என்ன பீமா, இப்படி ஏமாந்து போய் வந்திருக்கிறாய்? யுத்தத்தில் துரியோதனனைக் கொன்றது நீதான். அரக்கு மாளிகையில் பாண்டவர்களைக் காத்தவன் நீதான். உன்னை யுதிஷ்டிரன் புரிந்து கொள்ளவே இல்லை. நானாக இருந்தால், நகுல சகாதேவர்கள் அழைத்துப் போகும் முன்பு, அம்மாவை இங்கே தூக்கிக் கொண்டு வந்திருப்பேன்' என்கிறார்.

ஆவேசப்பட்ட பீமன் உடனே கிளம்பிப் போய், இரவோடு இரவாக அம்மாவைத் தூக்கிக்கொண்டு வந்து விடுகிறான். இதை அறிந்த கிருஷ்ணர் அருச்சுனனிடம் சென்று, 'எல்லா விஷயங்களிலும் பீமன் தன் இஷ்டம் போல் நடந்து கொள்கிறான். அதைக் கண்டு தருமன் வருத்தப்படுகிறான். அண்ணன் கவலையைத் துடைத்து, அம்மாவை மீட்டு வரவேண்டியது உன் கடமை இல்லையா?' என்று தூண்டி விடுகிறார். அர்ச்சுனன் உடனே புறப்பட்டு பீமனைக் காண வருகிறான்.

இருவருக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. பீமன், தன் உயிரே போனாலும் அம்மாவை அனுப்ப மாட்டேன் என்று சண்டைக்குத் தயாராகிறான். அர்ச்சுனனும் தனது காண்டீபத்தை உயர்த்திக்கொண்டு நிற்கிறான். இன்னொரு புறம் நகுல சகாதேவர்கள் தாங்கள் அவமானப் படுத்தப்பட்டு விட்டதாக தருமனிடம் முறையிடுகிறார்கள். தருமனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

குந்திதேவி கிருஷ்ணனை அழைத்து வரச் சொல்லி, 'என்ன நாடகம் இது? எதற்காக என் குழந்தைகள் இப்படி ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்கிறார்கள். இதை எப்படித் தடுப்பது?' என்று கேட்கிறாள்.

'அத்தை, உன் பிள்ளைகள் போல ஒற்றுமையாக உலகில் யாருமே இல்லை என்று உனக்குள் ஒரு சிறு கர்வம் இருந்தது. அதை உன்னையறியாமல் அடிக்கடி வெளிப்படுத்திக்கொண்டே இருந்தாய். இப்போது பார், அவர்கள் ஒற்றுமையின் லட்சணத்தை! பகை வளர்வதற்கு பாசமும் கூடக் காரணமாக இருக்க முடியும் என்று புரிகிறதா?' என்று சொல்லிச் சிரித்தார் கிருஷ்ணர். குந்தியின் கர்வம் அன்றோடு ஒழிந்துபோனது.

நன்றி: உள்ளங்கை எழுத்து, கதாசரிதம், எஸ் இராமகிருஷ்ணன். (சிறிய மாற்றங்களுடன்)

1. ஓர் அரசனுக்கு உரிய வசதிகள் எவையென இவ்வுரைப்பகுதியில் கூறப்பட்டுள்ளன? (2புள்ளிகள்)

2. இவ்வுரைப் பகுதியிலே, 'குறை' எனக் கூறப்படுவது எது? (2 புள்ளிகள்)

3. இவ்வுரைப் பகுதியிலே குறிப்பிடப்பட்ட பீமனின் திறமை ஒன்றையும், குறைபாடு ஒன்றையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

4. கிருஷ்ணர் இந்த நாடகத்தை ஏன் நடத்தினார்?
பதிலை உமது வசன நடையில் விளக்குக. (4 புள்ளிகள்)

**பின்வரும் 5 – 8 வரையான வாக்கியங்களுக்கு பொருத்தமான சொற்றொடர்களைத் தெரிவு செய்து தரப்பட்ட இடத்தில் எழுதுக.**

அ) சல சல ஆ) சிலு சிலு இ) பள பள ஈ) குடு குடு

5. தென்றல் காற்று .................................... என வீசியது.

6. ஓடையில் நீர் .................................... என ஓடியது.

7. தாத்தா .................................... என நடந்தார்.

8. அக்காவின் வெள்ளிச் சிலம்பு .................................... என மின்னியது.

**பின்வரும் 9 – 12 வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்க. (4 புள்ளிகள்)**

அ) பதிவேற்றம் ஆ) வலையொளி இ) முத்திரட்சி ஈ) பற்றியம்

9. Youtube

10. 3D

11. Messanger

12. Upload

**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து 13 – 16 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வெற்றிபெற நிச்சயமான வழி வாழ்வில் ஏற்படும் ஆரம்பத் தோல்விகள் தான். மோட்டார் (mortar mechanism) மெக்கானிசத் துறையில் மேதையான சார்லஸ் கெட்டரிங் 'ஒவ்வொரு கண்டுபிடிப்பாளனும் எப்பொழுதும் தோற்ற வண்ணமிருக்கிறான்' என்று

சொன்னார். 'தோல்விகளைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை தவிர்க்கத் தேவையில்லை. ஆயிரம் தடவைகள் அவனது முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. முயற்சி செய்து தோற்பதற்கும், தோற்றபின் முயல்வதற்கும் நாம் சலிப்புக் காட்டக் கூடாது. முயற்சி செய், தோல்வி அடை, தோல்விக்குப் பின் முயற்சி செய்' என்று அவர் கூறினார்.

தொடர்ந்து தோல்வியுறுவதால் தன்னால் முடியாது என்று மனம் தளர்ந்து போதல் கூடாது. தோல்வி உங்கள் பெருமையை குலைத்து விடக் கூடாது. தன்னம்பிக்கை அழிவுற்று, திடீர் தோல்வியாளர்கள் நிரந்தரத் தோல்வியாளர்களாக மாறி விடுகின்றார்கள். அவர்களின் தன்னம்பிக்கை சின்னாபின்னமாகின்றது. அவர்கள் ஆர்வம் இழந்து முயற்சியைக் கை விடுகின்றார்கள். சில நேரத் தோல்விகளால் மனம் பதறி விடுகின்றவர்கள் சீக்கிரம் முயற்சிகளிலிருந்து விலகி விடுகின்றார்கள். அத்துடன் தங்களுக்குள் சுருண்டு விடுகின்றார்கள். தங்களால் வெற்றி பெற இயலாது என்று அஞ்சுகின்றார்கள்.

பழைய வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து நாம் உண்மைகளை உணர்வது போலவே கடந்த காலத் தவறுகளிலிருந்து உண்மைகளை உணரலாம். தெரிந்து செய்யும் தவறுகள் எம் மனதில் குற்ற உணர்ச்சியை உருவாக்கி விடும் என்பதை மறத்தல் கூடாது. தெரிந்து செய்யும் கெட்ட செயல் பின்விளைவுகளை ஏற்படுத்தும். குடும்பத்திற்கு நீங்காத அவமரியாதையை உண்டு பண்ணும். ஒருவரது முன்னேற்றத்திற்குப் பிரதான தடைக்கல்லாகவும் இது அமையும். மனோதத்துவ மருத்துவரான டாக்டர் குணசேகரன் அவர்கள், 'தெரிந்து செய்யும் கெட்ட செயல்களால் ஏற்படும் திருப்தியிலும் பார்க்க குற்ற உணர்வே அவர்களுக்கு மேலோங்கி இருக்கும்' என்று கூறியுள்ளார்.

எது பலன் தராது என்பதைக் கண்டறிவதற்கும் எது பலனைத் தரும் என்பதைக் சோதித்து அறிவதற்கும் பல தவறுகளை ஒருவர் செய்யக் கூடும். தாமஸ் எடிசன் பத்தாண்டுகள் தவறாகவே சோதனை புரிந்து வந்தார். இறுதியில, கார்பன் தொலைபேசி ஊடுகடத்தியைக் கண்டு பிடித்தார். எடிசன் பல தாவரங்களைப் பரிசோதித்து வகைப்படுத்திய பிறகே 'லேடக்ஸ்' என்ற ரப்பர் பொருளை ஒரு தாவரத்திலிருந்து உற்பத்தி செய்யலாம் என்பதைக் கண்டறிந்தார்.

ஒருமுறை வெற்றி பெற பல தவறுகள் அல்லது தோல்விகள் ஏற்படலாம். எடிசன் வேறு எவரையும் விட அதிகம் தோல்விகள் கண்டவர். எது பலன் தராது என்பதை அவர் தனது ஆய்வுகளின் மூலமாகக் கற்று உணர்ந்தார். இந்தக் கல்விக்குப் பின் வெற்றி அவருக்குச் சுலபமானதாக இருந்தது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள கண்டுபிடிப்புகளை அவர் பதிவு செய்தார். எனவே, தவறு செய்து விடுவோம் என்று அஞ்சினால் நாம் பெரிய வெற்றியை அடைய முடியாது.

13. தோல்வியைச் சந்திப்பது பற்றி சார்லஸ் கெட்டரிங் என்ன கூறுகின்றார்? (3 புள்ளிகள்)

14. திடீர்த் தோல்விகளால் மனம் தளரும்போது அது எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று கட்டுரையாளர் கருதுகின்றார்.

15. தெரிந்து செய்யும் கெட்ட செயல்கள் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை விளக்குக. (3 புள்ளிகள்)

16. விடாமுயற்சிக்கு உதாரணமாக தாமஸ் எடிசன் கூறப்பட்டுள்ளார். அதற்கான காரணங்களை விளக்குக. (3 புள்ளிகள்)

**பின்வரும் 17 – 20 வரையான பாடல் வரிகளுக்குப் பொருத்தமான புலவரை தெரிவு செய்து தரப்பட்ட இடத்தில் எழுதுக.**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) ஔவையார் ஈ) திருவள்ளுவர்

17. ‘கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக’

18. ‘ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்’

19. ‘தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்’

20. ‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’

**பின்வரும் 21 – 26 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்து தரப்பட்ட இடத்தில் எழுதுக.**

21. கடலும் கடல் சார்ந்த பிரதேசத்தை எப்படி அழைப்பர்
அ) மருதம் ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) குறிஞ்சி

22. சங்க இலக்கியத்தின் பொருள் மரபு யாது?
அ) அகமும் பக்தியும் ஆ) அகமும் புறமும்
இ) வீரமும் பக்தியும் ஈ) புறமும் வீரமும்

23. ய், ர், ல், வ், ழ், ள் என்ற மெய்யெழுத்துக்களின் இனம் எது?
அ) வல்லினம் ஆ) மெல்லினம் இ) இடையினம் ஈ) யாவும் சரி

24. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா எது?
அ) வெள்ளிவிழா ஆ) பொன்விழா இ) மணிவிழா ஈ) பவளவிழா

25. மகாகவி பாரதியார் வாழ்ந்த காலப்பகுதி எது?
அ) சோழர் ஆட்சிக் காலம்
ஆ) நாயக்கர் ஆட்சிக் காலம்
இ) ஆங்கிலேயர் ஆட்சிக் காலம்
ஈ) பல்லவர் ஆட்சிக் காலம்

26. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) புறநானூறு இ) மகாபாரதம் ஈ) கம்பராமாயணம்

**பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து 27 – 30 இலக்க வினாக்களுக்கு முழு வசனங்களில் விடை எழுதுக:**

செந்நெல் மாற்றிய சோறும் – பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை – கட்டித்
தயிரோடு மிளகின் சாறும்,
நன் மதுரஞ் செய் கிழங்கு – கானில்
நாவிலினித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

பாரதிதாசன்

27. கவிதையில் குறிப்பிடப்படும் தமிழரின் உணவு வகைகள் ஐந்தினை குறிப்பிடுக.
(5 புள்ளிகள்)

28. கவிதையில் குறிப்பிட்ட மருத்துவ குணம் நிறைந்த பொருள் எது?
(1 புள்ளி)

29. உணர்வை வளர்ப்பது எது?
(1 புள்ளி)

30. உடலை வளர்ப்பது உணர்வை வளர்ப்பது இவையிரண்டில் எது மேலானது என்கிறார் கவிஞர்? உமது பதிலை விளக்குக.
(3 புள்ளிகள்)

**பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்கு குறையாமல் எழுதுக. (15 புள்ளிகள்)**

சமூகத் தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை தீமைகளை மதிப்பீடு செய்து கட்டுரை ஒன்றினை எழுதுக.

அல்லது

‘2030 ல் மாணவர் வாழ்க்கை முறை’ என்ற தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றினை பாடசாலையில் நடைபெறும் சிறுகதைப் போட்டிக்காக எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2019